Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் .**

**திருவெண்ணெய்நல்லூர்.**

CC.No.46/2023

**2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம் (1969-ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | காவல் ஆய்வாளர் |
| பெயர் | - | ஜெயலட்சுமி | வட்டம் | - | திருப்பத்தூர் |
| க/பெ | - | சங்கர் | சமயம் | - | |
| கிராமம் | - | திருப்பத்தூர் | வயது | - | 46 |
| சாதி | - | | | | |

நாள் ( Dated) : 20.02.2026

| | |
|---|---|
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | -திறந்த நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர். |
| இந்த வழக்கில் வழக்கறிஞர்கள் | அரசுக்காக – திரு. ஐ. பாரூக் ஷா, பி.ஏ., எல்.எல்.எம்., அரசு உதவி வழக்கறிஞர், நிலை-2 |
| | எதிரிக்காக திரு.விஜய பிரித்திவிராஜன், வழக்கறிஞர், |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE POINT)** | |
| இடம் ( Venue) | நகர காவல் நிலையம் , திருப்பத்தூர் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | திருமதி.ஜெயலட்சுமி, காவல் ஆய்வாளர் |

| | |
|---|---|
| | திருப்பத்தூர் நகர காவல் நிலையம். |
| சாட்சி ( Witness) | அசா.5 |

சாட்சி திருப்பத்தூர் நகர காவல் நிலையத்திலிருந்து நீதிமன்ற கானொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறார்.

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச 317 மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 14.02.2019 ந் தேதி திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் திரு.குமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த விமலாஸ்ரீ என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.104/2019 ச/பி. 279, 337 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2 ஆகும்.**

2. மேற்படி வழக்கை அப்போதைய ஆய்வாளர் ஜோகிந்தர் என்பவரின் பார்வைக்கு வைத்ததை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அவர் தற்போது இறந்துவிட்டதால் அவர் தயார் செய்து வைத்துள்ள கோப்புகள் மற்றும் எனது விசாரணை அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 15.02.2019 ந் தேதி காலை 06.00 மணியளவில் ஆய்வாளர் ஜோகிந்தர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஏழுமலை மற்றும் அறிவழகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ.3, 4 ஆகும்.**

3. பின்பு விபத்தில் இறந்துபோன வீரன் என்பவரின் பிரேத்தை விழுப்புரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் அன்றே காலை 08.00 மணி முதல் 09.00 மணி வரை பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்துள்ளார். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்**. பின்பு இறப்பிற்கான உண்மையான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை உடற்கூறாய்வு செய்வதற்காக பிரேதத்தையும், வேண்டுகோள் கடிதத்தையும் காவலர் சுந்தர் என்பவரிடம் கொடுத்து

அனுப்பி வைத்துள்ளார்.

4. பின்பு சாட்சிகள் விமலாஸ்ரீ, சேகர், தண்டபாணி, காந்தி, மகாலிங்கம், ரமேஷ், வேலாயுதம், ஏழுமலை ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.. அவரது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரியை தேடிச்சென்றதில் எதிரி மணிகண்டன் 20.02.2019 ந் தேதி 13.00 மணியளவில் விழுப்புரம்-திருச்சி தேசிய நெடுஞ்சாலை, அரசூர் பாரதி நகர் பஸ் ஸ்டாப் அருகே எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

5. பின்பு விபத்தை ஏற்படுத்திய TN91X1549 என்ற வாகனத்தை 21.02.2019 ந் தேதி மோட்டார் வாகன ஆய்விற்காக அனுப்பிவைத்துள்ளார். விபத்துக்குள்ளான TN03D6725 என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்காக அனுப்பி வைத்துள்ளார். பின்பு ஜோகிந்தர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் வழக்கின் கோப்புகளை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்ததில் சாட்சிகள் அவரிடம் கூறியது போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

6. பின்பு விபத்தில் இறந்துபோன வீரன் என்பவரின் பிரேதத்தை உடற்கூறாய்வு செய்த மருத்துவர் அருண் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து உடற்கூறாய்வு அறிக்கை பெற்றேன். **அந்த உடற்கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்.** இந்த விபத்தில் காயமடைந்த விமலாஸ்ரீ மற்றும்சேகர் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜெய்ஆனந்த என்பவரைவிசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு அறிக்கைகள் பெற்றேன். **அந்த விபத்து பதிவேடு அறிக்கைகள் (2 எண்ணிக்கைகள்) முறையே அ.சா.ஆ.7, 8 ஆகும்**. அதில் மருத்துவர் அவர்களுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்து தெரிவித்துள்ளார்.

7. பின்பு இந்த விபத்து வழக்கில் தொடர்புடைய இரண்டு வாகனங்களையும் ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் விமலா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்றேன். **அந்த மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் (2 எண்ணிக்கைகள் ) முறையே அ.சா.ஆ.9, 10 ஆகும்**. வழக்கில் பிரேத அலுவலாக சென்ற காவலர் சுந்தர் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7.இந்த வழக்கை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் குமார் என்பவரை

என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவரின் கருத்தின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை ச/பி. 279, 337 இதச என்பதை ச/பி. 279, 338, 304(எ) இதச சட்டப்பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்றல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும். இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது ச/பி. 279, 338, 304(எ) படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

1. சம்பவம் நடந்து 4 மணி நேரம் காலதாமதாக தான் என்னிடம் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்,வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் காலம் 4 ல் எழுத்து மூலமாக புகார் பெறப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.
2. எனது விசாரணையில் உதவி ஆய்வாளர் குமார் விமலாஸ்ரீ என்பவர் நிலையம் ஆஜராகி புகார் மனு கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் வாக்குமூலமாக வாங்கியிருந்தால் இரண்டு புகார் வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல.
3. புகாரை யார் எழுதியது என்றால் உதவி ஆய்வாளரை தான் கேட்க வேண்டும். எனது விசாரணையில் உதவி ஆய்வாளர் அதைப்பற்றி சொல்லியுள்ளாரா என்றால் அதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. நான் அவரை விசாரிக்கவே இல்லை என்றால் சரியல்ல. புகாரில் கண்ணுற்ற சாட்சிகள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.
4. புகாரில் கண்ணுற்ற சாட்சிகள் எதாவது சொல்லியுள்ளார்களா என்றால் சேகர் த/பெ. மணி அவர் காயமுற்றவர், கண்ணுற்ற சாட்சி தான். புகாரில் 12 வது வரியில் இடைச்சொருகலாக மதியம் 4 மணி என்பதை 01.00 மணி என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் அது உதவி ஆய்வாளரை தான் கேட்க வேண்டும், நான் அடுத்த கட்ட விசாரணை தான் செய்துள்ளேன்.
5. புகாரில் தெற்கிலிருந்து கிழக்கு பக்கம் வளைந்து நின்ற போது சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். எதிரியாக சொல்லப்படுபவர் வடக்கு நோக்கி செல்கிறார் என்றால் தவறு. எதிரியாக சொல்லப்படுபவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்கிறார் என்றால் புகாரில் அவ்வாறு தான் உள்ளது.
6. தெற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஆட்டோ எதிர்புறமான திசையில் highway -ல் என்.எச் ரோட்டில் வந்தால் அது சட்டப்படி தவறா என்றால் சரியல்ல, அவர்கள் கிராஸ் பண்ண போகவில்லை. மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ளவர்களை யாரையும் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.
7. ஆட்டோ ஓட்டுநர் சேகருக்கு ஓட்டுநர் உரிமை இல்லை என்றாலும், ஆர்.சி. பர்மிட், தகுதிச்சான்று எதுவும் இல்லை என்றால் அதைப்பற்றி தெரியவில்லை. ஆட்டோ ஓட்டுநர்

சேகருக்கு வண்டியே ஓட்ட தெரியாது என்றாலும், அப்படி சரியாக ஓட்டத்தெரிந்திருந்தால் அவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் எந்த சாட்சியையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான், ஆய்வாளரிடம் சொன்னதையே என்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

8. முதல் தகவல் அறிக்கையில் ச/பி.279, 337 இதச பதிவு செய்து ச/பி.279, 337, 304(எ) இதச என்று பிரிவு மாற்றல் செய்த அறிக்கை தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஆய்வாளர் செய்துள்ளார். மாதிரி வரைபடத்தில் சேகரின் ஆட்டோ தெற்கிலிருந்து கிழக்கு நோக்கி போகும் போது தேசிய நெடுஞ்சாலையில் தான் செல்கிறார்கள் என்றால் சரிதான். சேகருக்கு ஆட்டோ ஓட்டுநர் உரிமமே இல்லை என்றாலும், அவர் எங்கேயோ அடையாளம் தெரியாத வாகனத்தில் மோதி இழப்பீடு பெற வேண்டி எதிரி வாகனத்தின் மீது மோதியதாக பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

9. எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.